


Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



**ஸத் ஸம்ப்ரதாயம்**

An Unit of the e magazine Voice of Jagadguru)

## அருள் மொழிகள்

**शौचं द्विविधं, मृज्जलकृतं बाहां, आभ्यन्तरं च मनो बुद्धयोः नैर्मल्यं मायारागादिकालुष्याभावः ।**

**ஶௌசம்' த்³விவித⁴ம்', ம்ரு'ஜ்ஜலக்ரு'தம்' பா³ஹாம்', ஆப்⁴யந்தரம்' ச மனோ பு³த்³த⁴யோः நைர்மல்யம்' மாயாராகா³தி³காலுஷ்யாபா⁴வः**



வெளிச் சுத்தம், அந்தரங்க சுத்தம் .... வெளி சுத்தம் என்றாலே நீரினால் சுத்தப்படுத்துவது. மனதில் ஏமாற்றல், அதியாசை போன்ற கல்மஷங்களும் இல்லாமல் இருப்பது ஆப்யந்தர சுத்தம் என்று சொல்லப்படுகிறது. கடைசியாக மனதையும் இந்தரியங்களையும் அடக்குவது.

**यो बन्धन वध क्लेशान् प्राणिनां न चिकीर्षति । स सर्वस्य हितप्रेप्सुः सुखमत्यन्तमश्नुते ।।**

**யோ ப³ந்த⁴ன வத⁴ க்லேஶான் ப்ராணினாம்' ந சிகீர்ஷதி | ஸ ஸர்வஸ்ய ஹிதப்ரேப்ஸுः ஸுக²மத்யந்தமஶ்னுதே ||**

எந்த மனிதனுக்கு மற்றொருவனை தன் வசத்தில் வைத்துக் கொள்ளவோ, ஹிம்ஸை கொலை போன்ற தீய கார்யங்களைச் செய்ய விருப்பமில்லையோ, யாருக்கு எல்லோரும் ஸுகமாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்துவருமோ, அந்த மனிதன் அகண்டமான ஸுகத்தை அனுபவிப்பான். மேற்சொன்ன தர்மங்களை யாரொருவன் ஆச்ரணத்திற்குக் கொண்டு வருவானோ, அவனால் இஹத்திலும் | பரத்திலும் ஸந்தோஷமாக இருக்கமுடியும்."

மற்றொரு விஷயம் ஐச்வர்யத்திற்காகவோ, மோக்ஷத்திற்காகவோ வாழ்க்கையில் முன்னேற ஒரு ஞான குருவின் உபதேசந்தான் முக்கியம். அவரின் உபதேசத்தைக் கைக்கொண்டால் எல்லா எல்லைகளையும் தாண்டி ஸுக ஸாகரத்தில் மூழ்கி இருந்து வரமுடியும்.


—ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹா ஸ்வாமிகள்

**ஸத் ஸம்ப்ரதாயம்**

An Unit of the e magazine Voice of Jagadguru)

## விதுர நீதி

विद्यामदो धनमदः तृतीयोऽभिजनोमदः ।
मदाएतेऽवलिप्तानां एतएव सतां दमाः ॥८०॥
வித்³யாமதோ³ த⁴னமத³: த்ரு’தீயோ(அ)பி⁴ஜனோமத³: |
மதா³ஏதே(அ)வலிப்தானாம்’ ஏதஏவ ஸதாம்’ த³மா: ||80||




கல்வி, செல்வம், உயர்ந்த பிறப்பு ஆகியவை (மதத்தை) பெருமையை வளர்க்கின்றன. இவை கர்வமுள்ளவர்களுக்கு ஆணவத்தின் ஆதாரங்களாகின்றன; ஆனால் அதே விஷயங்கள் நல்லொழுக்கம் உள்ளவர்களுக்கு கட்டுப்பாடுகளாகவும் ஒழுக்கங்களாகவும் செயல்படுகின்றன.

असन्तो ऽभ्यर्थितास्मद्भिः क्वचित्कार्ये कदाचन ।
तावन्नतस्य सुकृतं किंचित्कार्यं कदाचन ॥ ८१ ॥
அஸந்தோ (அ)ப்⁴யர்தி²தாஸ்மத்³பி⁴: கசித்கார்யே கதா³சன |
தாவன்னதஸ்ய ஸுக்ரு’தம்’ கிஞ்சித்கார்யம் கதா³சன ||81||

நாம் எப்போதாவது நம்மைத் தாழ்த்திக் கொண்டு, தகுதியற்றவர்களிடம் உதவிக்காக மன்றாடினால், அடையப்படும் ஒரே "நல்ல செயல்" தன்னை வணங்குவது மட்டுமே - எந்த உண்மையான நோக்கமும் ஒருபோதும் நிறைவேறாது.

गतिरात्मवतां सन्तः सन्तएव सतां गतिः ।
असतांच गतिस्सन्तः नत्वसन्तः सतां गतिः ॥
க³திராத்மவதாம்’ ஸந்த: ஸந்தஏவ ஸதாம்’ க³தி: |
அஸதாஞ்ச க³திஸ்ஸந்த: நத்வஸந்த: ஸதாம்’ க³தி: ||


நல்லொழுக்கம் உள்ளவர்கள் நல்லொழுக்கம் உள்ளவர்களுக்கு அடைக்கலம்; நல்லொழுக்கமுள்ளவர்கள் மட்டுமே நல்லவர்களுக்கு அடைக்கலம். தீயவர்களுக்குக் கூட, நல்லொழுக்கமுள்ளவர்களே அவர்களுக்கு அடைக்கலம்; ஆனால் துன்மார்க்கர்கள் ஒருபோதும் நல்லொழுக்கமுள்ளவர்களுக்கு அடைக்கலம் அல்ல. (தொடரும்....)



Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



**ஸத் ஸம்ப்ரதாயம்**

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஆசார்யாளின் உபதேசங்கள்

**(தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாசஸ்வாமிகள் அருளியது)**

## 12. இறைவனின் அருள் தேவை

சில பேர்களுக்கு நம்முடைய இந்திரியங்களுக்குக் கோசரமாகக் கூடிய





(புலன்களால் அடையப்படக்கூடிய) விஷயத்தை மட்டும்தான் நம்ப முடியுமே தவிர, இந்திரியங்களுக்குத் தெரியாத விஷயங்களை நம்ப முடியாது என்ற அபிப்ராயம் இருக்கிறது. இம்மாதிரி நம்புபவனால் மேற்சொல்லப்பட்ட விஷயத்திற்கு ஒரு காரணமும் சொல்ல முடியாது. திருஷ்டமான காரணத்தைச்

சொல்லவே முடியாது. அந்த இடத்தில் அதிருஷ்டம் ஒன்றுதான் காரணம். அதனால்தான் நாம் எவ்வளவு புத்திசாலிகள் ஆனாலும் ஈச்வரனின் அனுக்ரஹம் இல்லாவிட்டால் நம்முடைய காரியம் பலிக்காது என்று சொல்கிறோம். நம்முடைய முன்னோர்கள் ரொம்பவும் விவேசனை செய்து ஒரு முடிவுக்கு வந்தார்கள். மனிதனுடைய வாழ்க்கை ஒரு ரதம் போல் இருக்கிறது.ரதத்திற்கு இரண்டு பக்கத்திலும் இரண்டு சக்கரங்கள் வேண்டும். அந்தச் சக்கரங்களில் எந்த ஒரு சக்கரம் இல்லாவிட்டாலும் ரதம் செல்லாது. மனுஷ்யனுடைய வாழ்க்கை என்ற ரதத்திற்கு இருக்கக்கூடிய இரண்டு சக்கரங்கள் என்னவென்று கேட்டால், ஒன்று நம்முடைய பிரயத்னம்; இன்னொன்று ஈச்வரனுடைய அனுக்ரஹம். இந்த இரண்டு சக்கரங்களினால் நம்முடைய வாழ்க்கை என்கிற ரதம் போய்க் கொண்டிருக்கிறது. நாம் ஒரே சக்கரத்தினால் அந்த ரதத்தை ஓட்ட வேண்டும் என்று பார்க்கிறோம். முடிவதில்லை. அதனால்தான் சிலருக்கு அதிருஷ்டத்தில் நம்பிக்கை இல்லாமல், "நான் நினைத்தால் என்ன வேண்டுமானாலும் சாதிப்பேன்" என்கிற அஹங்காரம். இது தவறு. சிலருக்கு, "ஈச்வர ஸங்கல்பம் இருந்தால் எல்லாம் நடக்கும். அதற்கு நான் ஏன் சிரமப்பட வேண்டும்?" என்கிற ஒரு ஜாட்யம் (ஜடத்தன்மை) இருக்கிறது. இதுவும் தவறு. நீ பிரயத்னத்தைச் செய்தால் அதற்கு ஈச்வர அனுக்ரஹம் சககாரியாய் (உதவியாக) இருக்குமே தவிர, உன்னுடைய பிரயத்னம் இல்லாமல் ஈச்வர அனுக்ரஹம் ஒன்றுமட்டும் இருந்தால் போதும் என்று பேசாமல் உட்கார்ந்தால் அந்தக் காரியம் நடக்காது. அதனால் நாம் எவ்வளவு புத்திசாலிகளாய் இருந்தாலும்கூட ஈச்வரனை மறக்கவே கூடாது.

ஒரு சந்தர்ப்பத்தில் சாணக்யனுக்கும் சந்திரகுப்தனுக்கும் இடையே ஒரு கருத்திரமான (ஏற்படுத்தப்பட்ட) சண்டை உண்டாயிற்று. அப்பொழுது சாணக்யன், "அப்பேற்பட்ட நவநந்தர்களை யார் விநாசம் செய்தார்கள்?" என்று கேட்டான். அதற்கு சந்திரகுப்தன், **நந்தகுல வித்வேஷிணா தைவேன** என்று சொன்னான். அதாவது நந்த குலத்தின் எதிரியான தெய்வம்தான் அந்தக் காரியத்தையெல்லாம் செய்தது என்று சொன்னான். "விஷயம் தெரியாத பயந்த ஸ்வபாவம் உடையவர்கள் தெய்வத்தைச் சொல்வார்கள். நான் அப்படிச் சொல்லமாட்டேன். நான்தான் செய்தேன்" என்று சாணக்யன் சொல்லும்பொழுது சந்திரகுப்தனின் வாயிலிருந்து ஒரு வார்த்தை வந்தது. **வித்வாம்ஸோபி அவிகத்தனா பவந்தி.** "உண்மையாகவே நீங்கள் வித்வானாயிருந்தால் இப்படி உம்மையே புகழ்ந்துகொள்ள மாட்டீர். 'நான்தான் செய்தேன்' என்று சொல்ல மாட்டீர்" என்றான். அதனால், தெய்வத்தை ஒப்புக் கொள்ளாமல் வெறுமனே, "நான்தான் செய்தேன்" என்ற வார்த்தை விவேகிகளுக்குத் தகுந்ததில்லை. மனுஷ்யனுக்கு இருக்கக்கூடிய பிரத்யேகமான (தனிப்பட்ட) குணம் விவேகம்.

(தொடரும்....)


Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita

ஸத் ஸம்ப்ரதாயம்
An Unit of the e magazine Voice of Jagadguru)

## என்றும் புதியவர்
### ஜகத்குரு சங்கராசார்யார் ஸ்ரீமத் அபிநவ வித்யா தீர்த்த மஹாஸ்வாமிகள்

## 2. பேரறிவு (மஹாப்ரக்ஞை)
### மஹாப்ரக்ஞை — கல்விசார் அறிவாற்றலுக்கு அப்பால்

முதலில் அறிவாற்றலுக்கும் தகவிற்கும் என்ன தொடர்பு என்பதைப் பார்ப்போம். இதைப் பற்றிக் கல்விசார் உளவியலில் பிரபல ஆராய்ச்சியாளரான பேராசிரியர் ஹௌவர்ட் கார்ட்னரின் கோட்-பாட்டைச் சுருக்கமாகச் சொல்வோம். அறிவாற்றல் என்றால் என்ன என்ற கேள்விக்கு கார்ட்னர் விடையாகக் கூறுவது இது: “அறிவாற்றல் என்பது புதிர் / சிக்கல் / பிரச்னை ஆகியவற்றுக்கு ஒரு (அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட) கலாசாரக் கட்டமைப்பில் உயர்வாக மதிக்கப்படும் விடையைக் காணும் திறன்; அல்லது ஒரு (அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட) கலாசாரக் கட்டமைப்பில் உயர்வாக மதிக்கப்படும் புது விளைபொருள் ஒன்றை உருவாக்கும் திறன்." இந்த விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால் ந்யாய சாஸ்திரத்தில் உள்ள சிக்கலான வினாக்களுக்கு அவையில் பதிலளிப்பது அறிவாற்றலின் வெளிப்பாடு; அதே போல் ஒரு கணிணியின் துணை கொண்டு புதிய இசை வடிவங்களை உருவாக்குவதும் அறிவாற்றலின் வெளிப்பாடு. (பாரதீய சாஸ்திரங்களை உயர்வாக மதிப்பிடும் கட்டமைப்பில்) உயர்வாகக் கருதப்படுகிறது.

இரண்டாவது உதாரணம் வேறு விதமான கலாசாரத்தில் மதிக்கப் படுகிறது. ஆனால் இரண்டும் அறிவாற்றலின் வெளிப்பாடு தான் என்பது கார்ட்னரின் கோட்பாடு. அப்படியானால் பல நூறு அல்லது பல ஆயிரம் விதமான அறிவாற்றல்கள் உண்டா என்று கேட்டால் கர்ட்னரின் பதில் “இல்லை” என்பதே. அவருடைய கோட்பாட்டின் படி, மனித இனத்திற்குப் பொதுவான அறிவாற்றல்கள் ஏழு; மற்றவற்றை இவற்றினுள்ளோ இவற்றின் சேர்க்கையினுள்ளோ அடக்கிவிடலாம் என்பது அவருடைய வாதம் (இந்த ஏழுடன் ஓரிரண்டு சேர்க்கப்படலாம் என்றும் கூறுகிறார். அது நமக்கு முக்கியமல்ல.) கார்ட்னரின் ஏழு அறிவாற்றல்கள் பின்வருமாறு: மொழிசார் அறிவாற்றல் (linguistic intelligence). இசைசார் அறிவாற்றல் (musical intelligence), தர்க்கம் – கணிதம் சார்ந்த அறிவாற்றல் (logical-mathematical intelligence), வெளிசார் அல்லது பார்வை சார்ந்த (spatial or visual intelligence) அறிவாற்றல், உடல்சார் இயக்கவின் அறிவாற்றல், (bodily kinesthetic intelligence), தன்சார்ந்த

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

மற்றும் பிறர்சார்ந்த அறிவாற்றல் (intra and inter personal intelligences). இந்தப் பாகுபாட்டை உறுதி செய்ய கார்ட்னர் நரம்பியல் மற்றும் உளவியல் ஆய்வுகள், தனி நிகழ் ஆய்வுகள் (case studies) ஆகியவற்றை ஆங்காங்கே மேற்கோள்களாகக் காட்டுகிறார். அவற்றின் விவரங்களை கார்ட்னரின் நூல்களில் பார்க்கலாம். இங்கே கார்ட்னர் கூறும் சில விஷயங்களை மட்டும் நாம் கருத்தில் கொண்டு அதன் பின்னர் ஆசார்யாளின் அறிவாற்றலைப் பற்றி அவற்றின் அடிப்படையில் பேச முற்படுவோம்.



முதலாவதாக, எதற்கு இந்த பாகுபாடு என்றால் மனிதர்களின் தகவுகளைப் பாகுபடுத்த வேண்டிய அவசியம் (கல்விமுறைச் சீர்திருத்தம் முதலிய காரணங்களினால்) உள்ளது. மேலும், சில மனிதர்கள் ஒரு விஷயத்தில் சிறந்து விளங்குகின்றனர்; இன்னும் அரியவர் சிலர், ஒன்றுக்கு மேற்பட்டவற்றில் சிறப்பாகச் செயலாற்றுகின்றனர். ஆசார்யாளே இதற்கு உதாரணம் என்று முன்னால் சொன்னோம். கார்ட்னரின் கருத்தில் இது “அறிவாற்றலின் அறிகுறி”. இதுவும் அறிவாற்றலின் பாகுபாட்டை வலியுறுத்துகிறது.

இரண்டாவதாக, மனிதர்களின் எல்லாத் தகவுகளையும் இந்த ஏழு அறிவாற்றல்களுக்குள் அடக்கலாமா என்ற கேள்வி. ஏழா, எட்டா என்பது அவ்வளவு முக்கியமல்ல என்பது கார்ட்னரின் கருத்து (நூறோ ஆயிரமோ இல்லை; ஒன்றே என்பது நிச்சயமாக இல்லை). ஒரு மனிதனின் அறிவிற்குக் கணிணியை உவமையாகக் கூறுவது இப்பொழுது இயல்பாகிவிட்டது. "அவருக்கு கம்ப்யூட்டர் மூளை” என்று வழக்கிலும் சொல்கிறோம். ஆனால் கார்ட்னரின் கருத்துப்படி, அறிவு என்பது ஒன்றுக்கு மேற்பட்ட கணிணிகளின் (ஓரளவிற்கு) சுயேச்சையான செயல்பாடு. பொதுவாக இந்தக் கணிணிகள் (அறிவாற்றால்கள்) ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்டே செயல்-படுகின்றன. அதனால் ஒவ்வொன்றின் தன்னியக்கம் தெரிவதில்லை. ஆனால் சரியான ஆய்வுமுறைகளைக் கொண்டு நோக்கினால் இவற்றின் தனித்துவத்தை உணராலாம் என்பதே கார்ட்னரின் முடிவு. (நாம் முன்னர் கூறியது போல் கார்ட்னரின் ஆராய்ச்சி உளவியல், நரம்பியல் மற்றும் புலப்பாட்டியல் ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டது.)

(தொடரும்…..) மிக்க நன்றி : Centre for Brahmavidya

## ஸத் ஸம்ப்ரதாயம்


An Unit of the e magazine Voice of Jagadguru)

### நீதி மஞ்ஜரீ

**ஶ்ரீ ஞானானந்த பாரதீ ஸ்வாமிகள் இயற்றியது.**

**அத்யாயம் - 7**

### பலன் கொடுப்பது கடவுளே





ஈசுவரனே பலன் கொடுக்கிறாரென்றால் பலன் ஏற்படும் காலத்தில் அவரே நேரில் வந்து கொடுக்கட்டுமே என்று கேட்கக்கூடாது. ஏனென்றால் அவர் எப்பொழுதும் நேரில் தான் இருந்து கொண்டிருக்கிறார். எங்கிருந்தாவது வருவதற்கு அவசியமில்லை. எல்லாரும் அவருடைய ரூபமாகவிருப்பதால் அவருக்குத் தனியாய் ஒரு ரூபம் எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமில்லை. ஈசுவரன்தான் பலன் கொடுக்கிறாரென்று நமக்குத் தெரிந்து கொள்வதற்காகவாவது ஒரு ரூபம் தரித்துக் கொள்ளட்டுமே என்றால், அவர் அப்படி வந்தாலும் நாம் அவரை ஈசுவரன் என்று தெரிந்து கொள்ளமாட்டோம். அவர்சொன்னாலும் நாம் ஒப்பு கொள்ளமாட்டோம். ஆகையால் ஸாதாரணமாக அவர் ரூபமற்றவராக இருந்தேதான் பலன் கொடுக்கிறார். சில பக்தர்களுக்கு அவரவர் உபாஸ்யமூர்த்தியாக ஆவிர்ப்பவித்து அனுக்கிரஹம் செய்திருப்பதாகவும் புராணங்களிலும் பக்த சரித்திரங்களிலும் தெரிகிறது. அப்பொழுதும் பக்தியில்லாத மற்றவர்களுக்கு தென்படாமல் தானிருந்திருக்கிறார். நமக்கு கண்ணுக்குப் புலப்படவில்லையென்பதை வைத்து ஈசுவரன் நம்மை ரக்ஷிக்கவில்லையென்று நினைப்பது பிசகு.

**न देवा दण्डमादाय रक्षन्ति पशुपालवत् ।**

**ந தே³வா த³ண்ட³மாதா³ய ரக்ஷந்தி பஶுபாலவத் |**

ஒரு இடையன் எப்படி கையில் தடியேந்தி ஆட்டு கிடையை ரக்ஷித்து வருகிறனோ, அது மாதிரி நமக்கு முன் நின்று கொண்டு ஈசுவரன் ரக்ஷிப்பது

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

கிடையாது. ஈசுவரப்பிரஸாதம் நமக்கு ஏற்பட்டிருக்கிறதென்பதை நம்முடைய புத்திவிருத்தியிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

**यं हि रक्षितुमिच्छन्ति बुद्धया तं योजयन्ति ते ॥**

**யம்’ ஹி ரக்ஷிதுமிச்ச2ந்தி பு3த்3த4யா தம்’ யோஜயந்தி தே ||**

இப்பொழுது நமக்கு ஸாத்வீகமான புத்தியேற்பட்டிருக்கிற படியால் ஈசுவரப்பிரஸாதம் இருக்கிறதென்று தெரிந்து கொண்டு அந்த புத்தியை உபயோகப்படுத்தி ஸாத்விகமான பிரவிருத்தி செய்வோமானால் சிரேயஸ் அடையலாம். ஈசுவரன் நேரில் வந்து நின்று கொண்டு நம்மிடம் வேலை வாங்குவார் என்றாவது வேலைக்குச் சம்பளம் கொடுப்பாரென்றாவது ஒரு சாஸ்திரத்திலும் சொல்வது கிடையாது.

ஒரு சிவாலயத்தின் வாசலில் ஒரு பிச்சைக்காரன் தன் துணியை விரித்துக்கொண்டு ஆலயத்திற்குள் போகிறவர்களிடமும் திரும்பி வருகிறவர்களிடமும் பிச்சை கேட்டுக் கொண்டிருப்பது வழக்கமாயிருந்தது. யாராவது கொடுத்தால் பகவான் கொடுக்கிறாரென்றே நினைப்பான். கொடுக்காமல் போனால் அதுவும் பகவான் இஷ்டம் என்றே நினைப்பான். பிச்சை எடுக்கும் காலத்திலும் ஈசுவர நாமத்தைத் தவிர வேறே சொல்கிறதில்லை. இவ்விதமாகப் பிரதி தினம் காலை ஆறுமணி முதல் ஸாயங்காலம் ஆறுமணி வரையில் கோவில் வாசலில் உட்கார்ந்துவிட்டுக் கிடைத்ததைக் கொண்டு ராத்திரி ஆஹாரம் செய்து கொள்வான். இந்த லக்ஷணத்தில் விவாஹமாகிக் குழந்தைகளும் நிறைய இருந்தன. இப்படியிருந்து கொண்டிருக்கும்போது அவனுடைய ஸாத்விக மனோபாவனையைக் கண்டு கருணை மேலிட்டு அவ்வாலயத்திலுள்ள அம்பாள் ஒருநாள் ராத்திரி அர்த்தஜாம பூஜை கழிந்தபிறகு பகவானிடத்தில் தெரியப்படுத்தினாள். "இவன் ஸதா காலமும் நம்முடைய ஆலயத்தின் வாசலிலேயே இருந்து வருவதும் தவிர நம்மையே சரணமென்று பாவித்திருக்கிறான். அவனுக்கு நாம் அனுக்ரஹம் செய்ய வேண்டியது அவசியமில்லையா?" என்றாள். அதற்கு பகவானும், "உன் இஷ்டப்படியே செய்கிறேன்” என்று சொல்லிவிட்டு கர்ப்பகிருஹத்திற்கு வெளியிலிருந்த கணபதியைக் கூப்பிட்டு "நம் ஆலய வாசலில் இருந்து கொண்டிருக்கிற பிச்சைக்காரனுக்கு நாளை ராத்திரி 12 மணிக்குள் லக்ஷரூபாய் கொடுக்க வேண்டும்" என்று உத்திரவு செய்தார். அவரும் அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டார்.

(தொடரும் …) மிக்க நன்றி : ஸ்ரீ ஞானானந்த பாரதீ க்ரந்த ப்ரகாசன ஸமிதி

ஸத் ஸம்ப்ரதாயம்
An Unit of the e magazine Voice of Jagadguru)

# ||श्रीशारदास्तोत्रम्||

## श्रीशृङ्गाद्रौ श्रीशारदानवरात्रोत्सवसमये

## ஶ்ரீஶாரதா³ஸ்தோத்ரம்

## (ஶ்ரீ சிருங்க கிரியில் சாரதாநவராத்திரியின்போது)

**(ஶ்ரீ சிருங்ககிரி ஶ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஶ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகள் இயற்றியது)**


विहङ्गं कुरङ्गं तुरङ्गं च वाहं विधायाशुगं भ्रान्तिमासाद्य किं त्वम् |
गजं मन्दगं वाहमद्यातनोषि प्रणम्रस्य मे ब्रूहि वाचामधीशे ||६०||
விஹங்க³ம்' குரங்க³ம்' துரங்க³ம்' ச வாஹம்' விதா⁴யாஶுக³ம்' ப்⁴ராந்திமாஸாத்³ய கிம்' த்வம் |
க³ஜம்' மந்த³க³ம்' வாஹமத்³யாதனோஷி ப்ரணம்ரஸ்ய மே ப்³ரூஹி வாசாமதீ⁴ஶே ||60||

வேகமாகச் செல்கிற பறவையையும் மானையும் குதிரையையும் வாகனமாக்கிப் பிரமை பிடித்த நீ மெள்ளச் செல்கிற யானையை இன்று வாகனமாக்கிக் கொண்டாயோ? வாக்கின் ஈசுவரி! வணங்கி நிற்கும் என்னிடம் கூறுவாய்! (60)

नतेष्टदानाय सदा जलार्द्रकराम्बुजा त्वं यत एव वाणि |
तस्मादिभोऽप्येष तवाङ्घ्रिसङ्गाद्दानाम्बुसंसिक्तकरो विभाति ||६१||
நதேஷ்டதா³னாய ஸதா³ ஜலார்த்³ரகராம்பு³ஜா த்வம்' யத ஏவ வாணி |
தஸ்மாதி³போ⁴(அ)ப்யேஷ தவாங்க்⁴ரிஸங்கா³த்³தா³னாம்பு³ஸம்'ஸிக்தகரோ விபா⁴தி ||61||

வாணி! வணங்குபவர் விரும்பியதைத் தருவதற்கு (தானத்திற்காக வார்த்த) நீரால் ஈரமடைந்த தாமரை போன்ற கைகள் கொண்டுள்ளாய். அதனால் இந்த யானையும் உன் சரணங்களின் தொடர்பால் தான நீரால் (மநீரால்) ஈரமடைந்த கை (துதிக்கை) உள்ளதாகக் காட்சி தருகிறது. (61)


केचित्प्राहुरनैपुणास्तु कुचयोः साम्यं हि कुम्भस्थले शुण्डायामथवोरुतौल्यमिभराडिच्छंस्तवागादिति |
नैतत्सम्भविता तनौ कठिनता यस्मात्ततः शारदे मन्ये ह्युत्सवसेवनाय हरिणा सम्प्रेषितः स्यादिति ||६२||
கேசித்ப்ராஹுரனைபுணாஸ்து குசயோ: ஸாம்யம்' ஹி கும்ப⁴ஸ்த²லே
ஶுண்டா³யாமத²வோருதௌல்யமிப⁴ராடி³ச்ச²ம்'ஸ்தவாகா³தி³தி |



Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

நைதத்ஸம்ப⁴விதா தனௌ கடி²னதா யஸ்மாத்தத: ஶாரதே³
மன்யே ஹ்யுத்ஸவஸேவனாய ஹரிணா ஸம்ப்ரேஷித: ஸ்யாதி³தி ||62||

சாரதையே / உண்மையறியாத சிலர், மத்தகத்தில் மார்பகத்தின் ஸம நிலையையும் தும்பிக்கையில் துடையின் ஸமநிலையையும் பெறவிரும்பி யானை நெருங்கி வந்துள்ளது என்பர் உடலின் பருமனிருப்பதால் இது அவ்வாறு நடந்திராது, உன் திருவிழாவைக் காண இந்திரனால் இது (ஐராவதம்) அனுப்பப்பட்டுள்ளதென நினைக்கிறேன். (62)

मम कौशिकवाहनता भवेद्धर्यश्वस्य सेवने किमिति |
शुक्लेभस्तव वाहः समभून्मातर्न सन्देहः ||६३||
மம கௌஶிகவாஹனதா ப⁴வேத்³த⁴ர்யஶ்வஸ்ய ஸேவனே கிமிதி |
ஶுக்லேப⁴ஸ்தவ வாஹ: ஸமபூ⁴ன்மாதர்ன ஸந்தே³ஹ: ||63||

தாயே! "எனக்குக் கௌசிகனின் (இந்திரனின் கோட்டானின்) வாஹனமாக இருக்க நேரும். ஹர்யச்வனின் (இந்திரனின் - பச்சைக்குதிரைக்காரனின்) ஸேவையால் என்ன கிடைக்கும்?" என நினைத்த அந்த வெள்ளையானை (ஐராவதம்) உன் வாகனமாயிற்று இதில் ஸந்தேகமில்லை. (63)

जम्भारौ कौशिकत्वं ह्यथ च तदनुजे वीक्ष्य सम्यग्धरित्वं त्यक्त्वा हीसाध्वसाभ्यामयमिभकुलराट्टौ शरच्चन्द्रशुभ्रः
इन्द्रोपेन्द्रादिसेव्यामपि सकलसुराराध्यपादारविन्दां त्वामेवातिप्रमोदात्कमलजदयिते सेवते नूनमेतत् ||६४||
ஜம்பா⁴ரௌ கௌஶிகத்வம்' ஹ்யத² ச தத³னுஜே வீக்ஷ்ய ஸம்யக்³த⁴ரித்வம்'
த்யக்த்வா ஹீஸாத்⁴வஸாப்⁴யாமயமிப⁴குலராட்டௌ ஶரச்சந்த்³ரஶுப்⁴ர: |
இந்த்³ரோபேந்த்³ராதி³ஸேவ்யாமபி ஸகலஸுராராத்⁴யபாதா³ரவிந்தா³ம்'
த்வாமேவாதிப்ரமோதா³த்கமலஜத³யிதே ஸேவதே நூனமேதத் ||64||

பிரும்மாவின் இனிய மனைவியே! ஜம்பனின் எதிரி கௌசிகன் (கோட்டான்-இந்திரன்). அவன் தம்பி வாமனனோ ஹரி.(விஷ்ணு - சிங்கம்) எனக்கண்டு கூச்சத்தாலும் படபடப்பாலும் இந்த சரத்காலத்துச் சந்திரன் போன்ற வெண்மை கொண்ட யானை அரசன், இருவரையும் விட்டகன்று, இந்திரனாலும் உபேந்திரனான வாமனனாலும் (ஹரியாலும்) வழிபடப்பெறுபவளும், தேவர்கள் அனைவராலும் ஆராதிக்கப்பெற்ற சரணகமலங்கள் கொண்டவளுமான உன்னையே மிகவும் மகிழ்ச்சியுடன் ஸேவிக்கிறான். இது உண்மை. (64)

(தொடரும் ...)

**ஸத் ஸம்ப்ரதாயம்**

An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஸ்ரீமத் அத்யாத்ம ராமாயணம்

## பாலகாண்டம்

### மூன்றாவது ஸர்கம்

கணவன்-மகன்-செல்வம் என்னும் சம்சாரக் கடலில் மூழ்கி, மாயையில் சிக்கி அலைகின்ற நான், இப்போது தங்கள் திருவடிகளில் சரணடைகிறேன். ஐயனே! தங்களுடைய இந்தத் திருவடிவம் என் மனத்தில் எப்போதும் நிலைத்திருக்க வேண்டும். உலகத்தையே மயக்குகிற தங்கள் மாயை என் புத்தியை மறைக்கக்கூடாது.

விசுவாத்மாவே! பூவுலகுக்குப் பொருந்தாத தங்களுடைய இந்தத் தோற்றத்தை மறைத்துக் கொள்ளுங்கள். மிகவும் மென்மையானதும் பேரானந்தத்தைத் தருவதுமான குழந்தை வடிவத்தைக் காட்டி அருளுங்கள். (அந்தக் குழந்தையை) மெல்ல அணைத்துக் கொண்டு தாலாட்டிச் சீராட்டி, பாலூட்டி வரும் நான் அறியாமையாகிற காரிருளைக் கடந்து செல்வேன்.

ஸ்ரீபகவான் சொன்னது

“அம்மா! நீங்கள் என்னென்ன விரும்புகிறீர்களோ அவையெல்லாம் எவ்வித மாற்றமின்றி அவ்வாறே நடைபெறும். பிரும்மாவினால் முன்பு ஒரு தடவை பிரார்த்திக்க பட்டதற்கிணங்க. பூமியின் பாரத்தைக் குறைக்கும் பொருட்டு ராவணனைக் கொல்வதற்காக மானுட வடிவம் தாங்கி நான் வந்துள்ளேன். நீங்களும், தசரதரும், முன்னொரு சமயத்தில் என்னை மகனாக அடைய விரும்பி தவம் செய்தீர்கள், மாசற்றவரே! அந்த விருப்பத்திற்கிணங்கவே நான் தங்கள் மகனாக இந்த பிறவியை பிறந்துள்ளேன்.

நீங்கள் பார்க்கும் என்னுடைய இந்தத் தோற்றம், நீங்கள் முன்பு செய்த கடுமையான தவத்தின் பயனாகும். என்னுடைய தரிசனம் மோட்சத்தை அளிக்கக்கூடியது. அத்தகைய உயர்ந்த தகுதியுடையவர்களுக்கு மட்டுமே நான் எனது இந்த திவ்ய தரிசனத்தை கொடுப்பேன். மோட்சத்திற்கு தகுதிபெறாத மற்றவர்களால் என்னுடைய இந்த தரிசனத்தை அடைய முடியாது.

நம் இருவரிடையே நிகழ்ந்த இந்தச் சம்பாஷணையை எவனொருவன் ஒருமித்த மனத்துடன் படிக்கிறானோ, அல்லது கேட்கிறானோ அவன் மரண காலத்தில் என்னை ஸ்மரணம் செய்து சாரூப்ய முக்தியை அடைகிறான்” இவ்வாறு அன்னையிடம் சொல்லிமுடித்த பின்னர், ராமன் ஒரு குழந்தையாக மாறி அழத் தொடங்கினார்.

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)



அந்தக் குழந்தை வடிவத்திலும் கூட, அவர் இந்திரநீல மணி போல் ஒளி வீசினார்; அகலமான கண்களுடன் மிக்க அழகியவராக இருந்தார்; இளங்காலைப் போதின் செம்மை படர ஒளிர்ந்தார்; எல்லா லோகபாலகர்களாலும் சீராட்டப்பட்டார். பின்னர், மகன் பிறந்துள்ள மகிழ்ச்சியான செய்தியைக் கேட்ட மன்னர் தசரதன், ஆனந்தக் கடலில் மூழ்கியவராய் குரு வசிஷ்டருடன் மகப்பேறு இல்லத்துக்கு ஓடொட்டி சென்றார்.

ஆனந்தத்தால் அவரின் கண்களில் நீர் துளிர்க்க, ஆசாரியரைக் கொண்டு ஜாதகர்மா முதலிய சடங்குகளை மிகவும் மகிழ்ச்சியுடன் அவர் செய்தார். அடுத்ததாக, தாமரைக் கண்ணாள் கைகேயி பரதனைப் பெற்றெடுத்தாள்; சுமித்திரைக்கு முழுநிலவு போன்ற முகமுடைய இரண்டு புதல்வர் பிறந்தார்கள். அப்போது, ஆயிரக்கணக்கான கிராமங்களையும் தங்கக் கட்டிகளையும் நவரத்தினங் களையும் ஆடைகளையும் மங்களகரமான பசுக்களையும் அந்தணர்களுக்கு (தானமாகக்) அந்த தசரத சக்கரவர்த்தி ஆனந்தத்துடன் கொடுத்தார்.

மெய்ஞானத்தால் அக்ஞானத்தைக் கடந்த முனிவர்கள் எவரிடம் ஆனந்திக்கிறார்களோ, எவர் தன் பேரழகினாலும் பெருங்கருணையாலும் பக்தர்களின் மனத்தில் ஆனந்தப் பெருக்கை உண்டாக்குகிறாரோ, (தற்போது கௌசல்யையின் வயிற்றில் பிறந்துள்ள) அவரை ராமன் என்று குரு அழைத்தார். அவ்வாறே உலகத்தைக் காக்கும் வல்லமை படைத்த கைகேயியின் மைந்தனுக்குப் பரதன் என்றும், சுமித்திரையின் குழந்தைகளில் எல்லாவிதமான நல்ல லட்சணங்களும் பொருந்தியவனுக்கு லட்சுமணன் என்றும், எதிரிகளை அழிப்பவனான மற்றவனுக்கு சத்ருக்னன் என்றும் ஆசாரியர் பெயர் வைத்தார். (கௌசல்யையிடமிருந்தும் கைகேயியிடமிருந்தும் சுமித்திரை) பாயஸம் ஏற்றுக் கொண்ட வரிசைப்படி, ராமச்சந்திரனுடன் லட்சுமணனும், பரதனுடன் சத்ருக்னனும் இரட்டையர்கள் போல் சுற்றி வந்தார்கள். (தொடரும்...)

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

Our Website link : https://www.voiceofjagadguru.com/
Telegram Channel : https://t.me/voiceofjagadguru

Instagram Channel :

https://www.instagram.com/stories/voice_of_jagadguru_voj/3601249542534134684?igsh=MW90YW13N2c5b2hqaA==

WhatsApp Community Channel: https://chat.whatsapp.com/Ly4wlaTu8Kc3sjjEYU8KGu

YouTube Channel : https://youtube.com/@jagad-guru-channel?si=brkLFqiz8sZJ6UIl

Facebook link : https://www.facebook.com/share/1Du5xkve4e/

For free e magazines : Our Mail ID : Info@voiceofjagadguru.com

| Editorial Board | | |
|---|---|---|
| Sri P A Murali | Hon' Advisor | Administrator & CEO, Sri Sringeri Mutt & It's Properties, Sringeri |
| Sri S N Krishnamurthy | Hon' Editor | Sri Sringeri Mutt, Sringeri |
| Sri Tangirala Shiva Kumara Sharma | Hon' Editor | Sri Sringeri Mutt, Sringeri |
| PujyaSri Swami Guruparananda | Hon' Editor | Founder Acharya, Poornalaya & Mentor Sri Swami Chidbhavananda Ashram, Vedapuri, Theni. |
| Sri B Vijay Anand | Web Director | Coimbatore |
| Smt B Srimathi Veeramani | Web Asst Director & Chief Editor | Tirunelveli |
| K M Kasiviswanathan | Hon' Editor | Tirunelveli |


ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள், ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்